**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 82–2023</u>**

பெயர் : மீரா D.W.1

க/பெ. : தினேஷ்

தேதி : 03.03.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை :–</u>

வாதி வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த விண்ணப்பம் குறித்து நான் தான் கிராம விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் மேற்படி கிராமத்தில் விசாரணை செய்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். ஏற்கனவே கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்து கொடுத்த அறிக்கையினை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். ஏற்கனவே கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கையில் ஆனந்தவல்லி என்பவர் அமுதசுரபி என்பவரை தத்து எடுத்து வளர்த்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. எடுத்து வளர்த்தாக குறிப்பிட்டுள்ளார்.

நான் அரசு ஊழியர் என்பதால் எனது மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்காக அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**